



admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்






| Vol: 03 | Issue: 88 | 4 Pages | 27.10.2025 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 88 | 4 பக்கங்கள் | 27.10.2025 | திங்கட்கிழமை | விலை ரூ. 6 | வருட சந்தா ரூ.1825 |




**வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்**

**வைத்தூறு போலக் கெடும்**

**விளக்கம்:**

குற்றம் நேர்வதற்கு முன்னமே வராமல் காத்துக் கொள்ளாதவனுடைய வாழ்க்கை, நெருப்பின் முன் நின்ற வைக்கோல்போர்போல் அழிந்துவிடும்.

# வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள்

## பீகாரைப் போல் தமிழகத்திலும் புயலை கிளப்புமா?



சென்னை, அக்.27

தமிழக சட்டசபைக்கு அடுத்த ஆண்டு (2026) ஏப்ரல் மாதம் சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. கடந்த ஜனவரி மாதம் வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலின் படி, தமிழகத்தில் 6 கோடியே 36 லட்சத்து 12 ஆயிரத்து 950 வாக்காளர்கள் உள்ளனர். இந்த நிலையில், வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் அடுத்த வாரம் தொடங்க இருக்கிறது.

ஏற்கனவே, பீகார் மாநிலத்தில் நடந்த வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் நடந்தபோது, லட்சக்கணக்கான வாக்காளர்கள் தங்களுடைய வாக்குரிமையை இழந்தனர். எனவே, தமிழகத்திலும் இந்தப் பணிகள் நடக்கும்போது அதிகப்படியான வாக்காளர்கள் நீக்கப்படுவார்கள் என்று தெரிகிறது.

பீகாரில் வாக்காளர்கள் நீக்கப்பட்டபோதே எதிர்ப்பு தெரிவித்த தமிழக அரசியல் கட்சிகள், சொந்த மாநிலத்திலேயே அதுபோல் நடந்தால் சும்மா விட்டுவிடுவார்களா என்ன?. அவர்களும் தயாராகத்தான் இருக்கிறார்கள்.

முதலில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிக்கான தேதியை தலைமை தேர்தல் ஆணையம் அறிவிக்க வேண்டும். அதனைத் தொடர்ந்து, அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டி கருத்துகளை கேட்க வேண்டும். அந்த வகையில், தலைமைத் தேர்தல் அதிகாரி, மாவட்ட தேர்தல் அதிகாரி (கலெக்டர்), வாக்குப்பதிவு அதிகாரி ஆகியோர் 3 விதமாக அனைத்து கட்சி கூட்டத்தை நடத்துவார்கள். அந்தக் கூட்டத்தில், வாக்காளர் பட்டியல் திருத்துவது தொடர்பான பணிகள் எந்த வகையில் மேற்கொள்ளப்படும் என்பது தெரிவிக்கப்படும்.

இதையடுத்து, வீடு வீடாக சென்று வாக்காளர்கள் சரி பார்க்கும் பணி தொடங்கும். 2002ம் ஆண்டு வாக்காளர்பட்டியலில் பெயர் இருப்பவர்கள் உரிய விண்ணப்பத்தை சமர்ப்பித்தால் போதுமானது. இந்த ஆண்டு வெளியான வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தவர்கள் ஆதார் கார்டு உள்பட ஏதாவது ஒரு ஆவணத்தை காட்டி பெயர் சேர்ப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் அனைத்து தொகுதிகளிலும் வாக்காளர்களின் பெயர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் இருப்பதாக கூறப்படுகிறது. மேலும், கடந்த 20 ஆண்டுகளில் வேலை நிமித்தமாக இடம் பெயர்ந்தவர்கள் பற்றியும் ஆய்வு செய்யப்பட இருக்கிறது. அந்த வகையில், சுமார் 50 லட்சம் வாக்காளர்கள் இடம் பெயர்ந்துள்ளதாக கருதப்படுகிறது. அவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் 2 இடங்களில் இருக்கலாம் என்று எண்ணப்படுகிறது. அதேபோல், இறந்துபோனவர்களின் பெயர்களும் இன்னும் வாக்காளர் பட்டியலில் இருப்பதாக கூறப்படுகிறது. இப்படி, 2 இடங்களில் பெயர் இருப்பதாக கருதப்படும் சுமார் 50 லட்சம் வாக்காளர்களின் பெயர்களும், இறந்த வாக்காளர்களின் பெயர்களும் கண்டுபிடித்து நீக்க நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது.

முதல் தலைமுறை வாக்காளராக இருந்தால், அவர்கள் தங்களுடைய பெற்றோரிடம் இருக்கும் ஆதாரங்களை சமர்ப்பிக்க வேண்டும். ஒரு மாதத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியை நிறைவு செய்ய தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளது. அதன் பிறகு ஜனவரி மாதம் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். அப்போது எவ்வளவு பெயர் நீக்கப்பட்டது என்ற விவரமும் வெளிவரும். பீகாரைப் போல் தமிழகத்திலும் புயலை கிளப்புமா? என்பது அப்போது தெரியவரும்.

## உக்ரைன் மீது ரஷியா தாக்குதல் 4 பேர் பலி



கீவ், அக்.27

உக்ரைன் , ரஷியா இடையே இன்று 1 ஆயிரத்து 340வது நாளாக போர் நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இப்போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன. அதேவேளை, போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. இதனால் இரு நாடுகளும் தொடர்ந்து மோதலில் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில், உக்ரைன் மீது ரஷியா நேற்று இரவு அதிரடி தாக்குதல் நடத்தியது. தலைநகர் கீவ், டினிபிரோபெட்ரோசோவ் நகரங்களை குறிவைத்து நேற்று இரவு ஏவுகணைகள், டிரோன்கள் மூலம் ரஷியா தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் 4பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர்.

## அமெரிக்காவில் துப்பாக்கி சூடு 2 பேர் பலி




வாஷிங்டன், அக்.27

அமெரிக்காவின் வடக்கு கரோலினா மாகாணம் ராபின்சன் நகரின் மெக்ஸ்டன் பகுதியில் நேற்று இரவு கேளிக்கை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் 150க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

அப்போது,அந்தநிகழ்ச்சியில்துப்பாக்கியுடன்நுழைந்தநபர்அங்கிருந்தவர்கள் மீது சரமாரியாக துப்பாக்கி சூடு நடத்தினார். இந்த துப்பாக்கிச்சூட்டில் 2 பேர் உயிரிழந்தனர். மேலும், 10 பேர் படுகாயமடைந்தனர்.

தகவலறிந்து விரைந்து சென்ற போலீசார் காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். மேலும் இந்த துப்பாக்கி சூடு நடத்திவிட்டு தப்பிச்சென்ற நபர் யார்? தாக்குதலுக்கான காரணம் என்ன? என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## சவுதியில் ஒட்டகம் மேய்க்கும் உ.பி. இளைஞர் ; மீட்கக்கோரி வெளியிட்ட வீடியோ



ரியாத், அக்.28

இந்தியாவை சேர்ந்த லட்சக்கணக்கானோர் சவுதி, கத்தார் உள்பட அரபு நாடுகளில் வேலை செய்து வருகின்றனர். இதில் பலரும் கொத்தடிமைகளாக நடத்தப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. மேலும், இந்தியர்களை வேலைக்கு சேர்த்தவர்கள் பாஸ்போர்ட்டு உள்ளிட்ட ஆவணங்களை பறித்துக்கொண்டு துன்புறுத்தும் சம்பவங்களும் அரங்கேறி வருகின்றன.

இந்நிலையில், உத்தரபிரதேச மாநிலத்தை சேர்ந்த இளைஞர் சவுதி அரேபியாவிற்கு சென்றுள்ளார். அவரை வேலைக்கு சேர்த்த நபர் அவரது பாஸ்போர்ட்டு உள்ளிட்ட ஆவணங்களை பறித்துக்கொண்டு பாலைவனத்தில் ஒட்டகம் மேய்க்க விட்டுள்ளார்.

இதையடுத்து தன்னை மீட்கக்கோரி , உதவிகேட்டு வீடியோ வெளியிட்டுள்ளார். தன்னை வேலைக்கு சேர்த்தவர் தன்னை கொலை செய்யப்போவதாக மிரட்டல் விடுத்துள்ளதாகவும் தான் இந்தியாவுக்கு திரும்ப பிரதமர் மோடி உதவ வேண்டும் என்றும் அந்த இளைஞர் வீடியோவில் தெரிவித்துள்ளார். இந்த வீடியோ சமூகவலைதளத்தில் வைரலான நிலையில் இதுதொடர்பாக சவுதி போலீசார் விசாரணை நடத்தினர். விசாரணையில் உதவிகேட்டு வீடியோ வெளியிட்ட இளைஞருக்கும் அவருக்கு வேலை வழங்கிய நபருக்கும் எந்த பிரச்சினையும் இல்லை என்றும் சமூகவலைதளத்தில் வைரலாகவே இளைஞர் இவ்வாறு வீடியோ வெளியிட்டதாகவும் சவுதி போலீசார் தெரிவித்துள்ளனர்.அதேவேளை,வைரல்வீடியோவில்இடம்பெற்றுள்ள நபரை தொடர்புகொள்ள முயற்சி நடைபெற்று வருவதாகவும், அவரது இருப்பிடம் குறித்த தகவல் இதுவரை தெரியவில்லை என்றும் சவுதியில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

## சிறந்த இலக்கிய படைப்பை வெளியிட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் நிதி விண்ணப்பங்கள் வரவேற்பு

சென்னை, அக்.27

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை, இலக்கிய மேம்பாட்டுச் சங்கத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் சிறந்த எழுத்தாளர்களின் சிறந்த இலக்கிய படைப்புகளில் 11 நபர்களது படைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இவர்களது படைப்பினை வெளியிட உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இதில் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் /மதம் மாறிய ஆதிதிராவிடர் இனத்தை சேர்ந்த 9 எழுத்தாளர்கள் மற்றும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் பிரச்சனைகளைப் பற்றி எழுதும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் அல்லாத ஒரு எழுத்தாளர் மற்றும் பழங்குடியினர் பற்றி எழுதும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அல்லாத எழுத்தர் ஒருவரும் தேர்ந்தெடுக்கப் படுவர். இதனை ஊக்குவிக்கும் வண்ணம் இவர்களது சிறந்த இலக்கிய படைப்பினை வெளியிட தலா ரூ.1,00,000/ ஆக பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்படவுள்ளது.

1. எழுத்தாளர்களுக்கு வயது வரம்பு இல்லை.

2. கதை, கட்டுரை, கவிதை, வரலாறு மற்றும் புதினம் ஆகியவை எதுவாகவும் இருக்கலாம். இருப்பினும் தமிழ் மொழியிலேயே படைப்பு இருக்க வேண்டும். பிறமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த தமிழ் மொழி படைப்பாகவும் இருக்கலாம்.




3. எம்.பில்., பி.எச்.டி., போன்ற படிப்புகளுக்குத் தயாரிக்கப்படும் ஆராய்ச்சிக் கட்டுரைகளுக்கு அவை அரிதான சிறப்புடையதாக இருக்க வேண்டும்.

4. படைப்புகள் 90 பக்கங்களுக்கு குறையாமல் இருக்க வேண்டும்.

5. ஏற்கனவே சந்தையில் வெளியிடப்பட்டுள்ள படைப்புகளைகொண்டு விண்ணப்பித்தல் கூடாது.

6. ஒரு முறை விருதுக்கு தெரிவுசெய்யப்பட்ட எழுத்தாளர்5 ஆண்டுகளுக்குபிறகே விண்ணப்பிக்க வேண்டும்.

7. படைப்புகளை தேர்ந்தெடுத்தல் குறித்து அரசால் அமைக்கப்பட்டுள்ள வல்லுநர் குழுவின் முடிவே இறுதியானது.

தகுதியுள்ள விண்ணப்பத்தாரர்கள் இதற்கான விண்ணப்பங்களை தொடர்புடைய மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகங்களிலும், ஆதிதிராவிடர் நல ஆணையரகத்திலும் வேலை நாட்களில் பெற்றுக் கொள்ளலாம். மேலும், tn.gov.in என்ற இணைய தளத்திலும் (website) (or) https://www.tn.gov.in/form பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பிக்க கடைசி நாள்.28.11.2025. விண்ணப்பதாரர்கள் தங்களது படைப்பினை இரு நகல்களிலும் டிஜிட்டல் ( Digital) முறையிலும், உரிய படிவத்தில் தவறாமல் கைபேசி எண்ணிணை குறிப்பிட்டு உரிய காலத்திற்குள் ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை05 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## சென்னையில் இருந்து 950 கி.மீ. தொலைவில் புயல் சின்னம்



சென்னை, அக்.28

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி, வலுப்பெற்று மாலை 5:30 மணி அளவில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக அதே பகுதிகளில் நிலவியது. இது, இன்று (25102025) காலை 05:30 மணி அளவில், மேற்கு திசையில் நகர்ந்து, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, 08:30 மணி அளவில் அதே பகுதிகளில், போர்ட் ப்ளேயரிலிருந்து (அந்தமான் தீவுகள்) மேற்குதென்மேற்கே சுமார் 440 கிலோ மீட்டர் தொலைவிலும், விசாகபட்டினத்திலிருந்து தென்கிழக்கே 970 கிலோ மீட்டர் தொலைவிலும், சென்னையிலிருந்து கிழக்குதென்கிழக்கே 950 கிலோ மீட்டர் தொலைவிலும், காக்கிநாடாவிலிருந்து தென்கிழக்கே 990 கிலோ மீட்டர் தொலைவிலும் நிலை கொண்டுள்ளது.

இது, மேற்குவடமேற்கு திசையில் நகர்ந்து, வருகின்ற 26ஆம் தேதி ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும், வருகின்ற 27ஆம் தேதி காலை, தென்மேற்கு மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் புயலாகவும் வலுவடைந்து, வடக்குவடமேற்கு திசையில் நகர்ந்து, 28ஆம் தேதி வாக்கில் தீவிரப்புயலாக வலுப்பெறக்கூடும். மேலும், வடக்குவடமேற்கு திசையில் நகர்ந்து, ஆந்திர கடலோரப்பகுதிகளில், மசூலிப்பட்டினம் கலிங்கப்பட்டினத்திற்கு இடையே காக்கிநாடாவிற்கு அருகில் தீவிரப்புயலாக 28ஆம் தேதி மாலை இரவு நேரத்தில் கடக்கக்கூடும். அச்சமயத்தில் காற்றின் வேகம் மணிக்கு 90 முதல் 100 கிலோ மீட்டர் வேகத்திலும், இடையிடையே 110 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

இதன்காரணமாக தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இந்த புயல் சின்னம் 7 கி.மீ. வேகத்தில் மேற்கு நோக்கி நகர்ந்து வருகிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# போலி இன்ஸ்டா ஐடி.. சிறுமிக்கு தொல்லை.. சேலம் செல்போன் பறிப்பு சம்பவத்தில் திடீர் திருப்பம்

சேலம், அக்.27

சேலம் புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள மேம்பாலத்தில் நபர் ஒருவரை 3 பேர் தாக்கி, அவரிடம் இருந்த செல்போனை பறித்து வழிப்பறி செய்ததாக வீடியோ வெளியானது. இந்த சம்பவம் தொடர்பாக காவல்துறை விளக்கம் அளித்துள்ளது.



அதாவது, சேலம் அம்மாபேட்டை அருகே 18 வயது இளைஞர், சிறுமி ஒருவருடன் நட்பில் இருந்துள்ளார். சுமார் 5 மாதங்களுக்கு முன்பு, நெல்லையை சேர்ந்த பிரம்மநாயகம் என்ற நபர், சுரேஷ் என்ற பெயரில், போலி இன்ஸ்டா ஐடி மூலம் சிறுமிக்கு தொல்லை கொடுத்ததாக கூறப்படுகிறது.

இதுபற்றி சிறுமி தனது ஆண் நண்பரிடம் கூறியுள்ளார். இதையடுத்து பிரம்மநாயகத்தை தொடர்பு கொண்டு சிறுமியின் நண்பர் எச்சரித்த நிலையில், பெண் பெயரில் இன்ஸ்டா ஐடி ஒன்றை உருவாக்கி, மீண்டும் அந்த ஆசாமி அட்டகாசத்தில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. இதனைத் தொடர்ந்து, சிறுமியின் நண்பர், பெண் பெயரில், பேக் இன்ஸ்டா ஐடியை உருவாக்கி, சேலத்திற்கு வரவைத்து, செல்போனை பறித்து, உடைத்துப் போட்டது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

# அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்கள் டிராக்டர் மூலம் அழிப்பு: பெண் விவசாயி கண்ணீர்



தஞ்சாவூர், அக்.27

தஞ்சை அருகே உள்ள திருப்பூந்துருத்தி கிராமத்தை சேர்ந்தவர் விஜி என்ற பெண் விவசாயி. இவர் 4 ஏக்கர் விளை நிலத்தை குத்தகைக்கு எடுத்து குறுவை சாகுபடி செய்திருந்தார். நெற்பயிர்கள் விளைந்து அறுவடைக்கு தயாராக இருந்தது. இந்த நிலையில் தொடர்ந்து பெய்த கனமழையால் அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டு பயிர்கள் அனைத்தும் சாய்ந்து மழைநீரில் மூழ்கி நெல்மணிகள் முளைக்கத் தொடங்கிவிட்டது. தொடர்ந்து மழைநீரில் பயிர்கள் மிதப்பதால் இனி மேல் அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. மேலும் அறுவடை செய்வதற்கும் கைகாசு போட்டு செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால்

மிகவும் மனமுடைந்த விஜி, முளைத்த நிலையில் இருந்த நெற்பயிர்களை டிராக்டர் மூலம் அழித்தார். பார்த்து, பார்த்து விளைவித்த நெற்பயிர்கள் இப்படி வீணாகி விட்டதே? என அவர் கண்ணீர் வடித்தார்.

இது குறித்து விஜி கூறுகையில், நான் 4 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்து சாகுபடி செய்தேன். சப்பாட்டுக்கு கூட வழி இல்லாமல் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் அதிக வட்டிக்கு பணம் வாங்கியும், குழுக்கடன், நிதி நிறுவனத்தில் கடன் வாங்கியும் சாகுபடி செய்தேன். இதுவரை ரூ.1.80 லட்சம் வரை செலவு செய்து அறுவடை செய்து லாபம் பார்க்க வேண்டிய பயிர்கள் மொத்தமும் வீணாக போய் விட்டது. பயிரை காப்பாற்ற முடியாது என்பதால் அழித்து விட்டேன் என்று கண்ணீருடன் கூறினார்.

# செங்கல்பட்டு நெல் கொள்முதல் நிலையங்களில் மத்திய குழுவினர் ஆய்வு

செங்கல்பட்டு, அக்.28

தமிழகத்தில் பெய்து வரும் வடகிழக்கு பருவ மழை காரணமாக, அறுவடை செய்யப்பட்ட நெல் மணிகளை உலர்த்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. இதனால் நெல் கொள்முதல் பணிகள் தாமதமடைந்துள்ளன. மத்திய அரசு விதிகளின்படி நெல்மணிகளின் ஈரப்பதம் 17 சதவீதத்தை மிறக்கூடாது என்ற நிபந்தனையுடன் தற்போது கொள்முதல் நடைபெறுகிறது.




கடந்த ஆண்டுகளில் மழைக்காலங்களில் 22 சதவீதம் வரை ஈரப்பதம் கொண்ட நெல்லை கொள்முதல் செய்ய அனுமதி வழங்கியது. அந்த வகையில், தற்போது பெய்து வரும் மழையை கருத்தில் கொண்டு 22 சதவீதம் ஈரப்பதம் கொண்ட நெல்லை கொள்முதல் செய்ய அனுமதி வழங்க வேண்டும் என மத்திய அரசிடம் தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.

இந்த நிலையில், மத்திய உணவுத்துறை துணை இயக்குநர் தலைமையில் 2 குழுக்கள் மற்றும் உதவி இயக்குநர் தலைமையில் ஒரு குழு ஆகியோர் அடங்கிய மத்திய அதிகாரிகள் குழுவினர், செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள 6 இடங்களில் இன்று ஆய்வு மேற்கொண்டனர். மதுராந்தகம், மாமல்லபுரம் சுற்று வட்டாரப் பகுதிகளில் உள்ள நெல் கொள்முதல் நிலையங்களில் இந்த ஆய்வு நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

# கரூர் சம்பவம்.. முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்த சி.பி.ஐ.: புஸ்சி ஆனந்த் உள்பட 3 பேர் மீது வழக்குப்பதிவு

கரூர், அக்.27

கரூரில் கடந்த மாதம் 27 ந்தேதி த.வெ.க. தலைவர் விஜய் பிரசாரத்தின்போது கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் பலியான சம்பவம் தொடர்பாக சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் சி.பி.ஐ. தரப்பில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. இந்த முதல் தகவல் அறிக்கை கரூர் கோர்ட்டில் கடந்த 22ந்தேதி தாக்கல் செய்யப்பட்டது.



அதில், கரூர் மேற்கு மாவட்ட த.வெ.க. செயலாளர் மதியழகன், மாநில பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த், இணைச்செயலாளர் நிர்மல்குமார் மற்றும் த.வெ.க.வை சேர்ந்த சிலர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதையடுத்து கரூர் கோர்ட்டில், சி.பி.ஐ. தரப்பில் தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கையின் நகல் கேட்டு த.வெ.க. வக்கீல்கள் சார்பில் நேற்று மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவை ஏற்றுக்கொண்ட நீதிபதி, த.வெ.க.வினருக்கு சி.பி.ஐ. தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கை நகலை கொடுக்க உத்தரவிட்டார். இதனையடுத்து த.வெ.க. வக்கீல்கள் முதல் தகவல் அறிக்கை நகலை பெற்றுக்கொண்டனர்.

சி.பி.ஐ. பதிவு செய்துள்ள முதல் தகவல் அறிக்கை குறித்து அதிகாரிகளிடம் கேட்ட போது, 'கரூர் டவுன் போலீசார் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் தான் சி.பி.ஐ. முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்துள்ளது. சி.பி.ஐ. விசாரணை அடிப்படையில் அடுத்தக் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்' என்றனர்.

# இரிடியம் மோசடியில் ஈடுபட்ட மோசடி கும்பல் மீதான தொடர் கைது நடவடிக்கை




ற்சென்னை, அக்.27

குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை வெளியிட்டுள்ள பத்திரிகை செய்தியில் தெரிவித்திருப்பதாவது:

இந்திய ரிசர்வ் வங்கியின் பேரில், போலியான ஆவணங்களை தயாரித்து முறையாக பதிவு செய்யாமல் டிரஸ்ட்கள் நடத்தி, இரிடியம் விற்பனை செய்வதால் வெளி நாடுகளிலிருந்து கோடிக் கணக்கில் பணம் வருவதாக பொய்யாக கூறி, தமிழ்நாட்டை சேர்ந்த பல்வேறு மோசடி கும்பல்கள் பொதுமக்களிடமிருந்து லட்ச கணக்கில் பணம் பெற்று, ஏமாற்றிவருவதாக கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில், குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை தானாக முன்வந்து, தமிழ்நாடு முழுவதும் பல வழக்குகளை பதிவுசெய்து விசாரணை தொடங்கியது.

முதற் கட்டமாக 12.09.2025 ம் தேதி நடைபெற்ற சோதனை மற்றும் கைது நிகழ்வில் 13 வழக்குகளில் தொடர்புடைய 30 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். அதனை தொடர்ந்து, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் 20க்கும் அதிகமான வழக்குகள் பதிவுசெய்யப்பட்டு பாதிக்கப்பட்ட நபர்களிடமிருந்து வழக்கு தொடர்பான தகவல்கள், ஆவணங்கள் பெறப்பட்டு, புலன் விசாரணை முடுக்கிவிடப்பட்டது.

தற்போது 23.10.2025 மற்றும் 24.10.2025 ஆகிய தேதிகளில் தமிழ்நாடு முழுவதும் 15 மாவட்டங்களில் இரண்டாம் கட்டமாக மாபெரும் சோதனை மற்றும் தேடுதல் படலம் நடைபெற்றது. குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறையைச் சேர்ந்த 8 காவல்துணை கண்காணிப்பாளர்கள் தலைமையில், 20 காவல் ஆய்வாளர்கள், 15 சார்பு ஆய்வாளர்கள் அடங்கிய குழு சோதனையில் ஈடுபட்டு கம்பத்தை சேர்ந்த சந்திரன், பெருமாநல்லூரை சேர்ந்த ராணி, முசிறி பகுதியை சேர்ந்த யுவராஜ், வருசநாடு பகுதியை சேர்ந்த பழனியம்மாள், நாகப்பட்டினத்தை சேர்ந்த ராஜசிவம் போன்ற 5 முக்கிய குற்றவாளிகளுடன் அவர்களது கூட்டாளிகள் என 27 குற்றவாளிகளை கைது செய்துள்ளது. குற்றவாளிகள் அனைவரும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு இருக்கின்றனர். புலன் விசாரணை தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

ஒரு லட்சம் கொடுத்தால் ஒரு கோடி, இரிடியம் விற்பனை மூலமாக கோடிக் கணக்கில் வெளிநாட்டிலிருந்து பணம் கிடைக்கும் மற்றும் ஆர்.பி.ஐ மூலமாக பணம் கிடைக்கும் போன்ற வதந்திகளை நம்பி மக்கள் யாரிடமும் பணம்கொடுத்து ஏமாற வேண்டாம் என்று குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை பொதுமக்களை கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருச்சியில் 2 மாடி வீடு மண்ணில் புதைந்ததால் பரபரப்பு

திருச்சி, அக்.27

திருச்சி இ.பி. ரோடு அருகே உள்ள பாரதியார் தெருவை சேர்ந்தவர் முருகானந்தம் (வயது 50). தனியார் ஊழியரான இவர் நரசிம்மன் என்பவருடைய 2 மாடி கொண்ட வீட்டை கடந்த ஆகஸ்டு மாதம் விலைக்கு வாங்கி உள்ளார்.

பழமையான இந்த வீட்டை முருகானந்தம் சீரமைக்க எண்ணினார். இதற்காக கட்டிட தொழிலாளர்களை வைத்து கடந்த 3 நாட்களாக சீரமைக்கும் பணியில் ஈடுபட்டார். முதல்கட்டமாக கீழ் தளத்தில் தரையை இடித்து புதுப்பிக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டனர்.

நேற்று காலையில் கீழ் தளத்தில் 2 தொழிலாளர்கள் சீரமைக்கும் பணியில் ஈடுபட்டனர். அதன்பின் மதியம் 2 மணி அளவில் அவர்கள் சாப்பிட சென்றுவிட்டனர். அப்போது வீட்டின் கீழ்தளம் முழுவதும் பலத்த சத்தத்துடன் மண்ணில் புதைந்தது. மேல்தளத்தில் கட்டிடத்தில் விரிசல் ஏற்பட்டு சேதம் அடைந்தது.



இதற்கிடையில் இந்த சத்தத்தை கேட்ட பக்கத்து வீட்டுக்கரர்கள் வீட்டில் இருந்து வெளியே வந்து பார்த்தனர். அப்போது, முருகானந்தத்தின் வீடு மண்ணில் புதைந்து இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தனர். உடனடியாக அவர்கள் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

அதன்பேரில் கோட்டை போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். மேலும் அந்த பகுதியில் பொதுமக்கள் திரண்டனர். போலீசார் விபரீதத்தை எடுத்துக்கூறி அவர்களை கலைந்து போக செய்தனர். மேலும் அங்கு பொதுமக்கள் செல்லாதவாறு தடுப்பு கம்பி அமைத்தனர்.

இந்த சம்பவம் குறித்து மின்வாரிய துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. பின்னர் மின்வாரிய ஊழியர்கள் விரைந்து வந்து அந்த பகுதியில்மின்இணைப்பை துண்டித்தனர். இதையடுத்து அருகில் உள்ள வீட்டிற்கு மாற்று இணைப்பு வழங்கும் பணியில் அவர்கள் ஈடுபட்டனர்.

சம்பவம் நடந்த பாரதியார் தெரு வீடுகள் நிறைந்த பகுதியாகும். மேலும் அந்த வீடு இடிந்து விழுந்தால் பலத்த சேதம் ஏற்பட்டு இருக்கும். அதுமட்டுமின்றி வீடு மண்ணில் புதைந்தபோது, அங்கு யாரும் இல்லாததால் உயிர் சேதம் தவிர்க்கப்பட்டது. இதைத்தொடர்ந்து அந்த வீட்டை முழுவதும் இடிக்க முடிவு செய்யப்பட்டு, அதற்கான பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டனர். இந்த சம்பவத்தால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# பரபரப்பான அரசியல் சூழலில் தமிழக காங்கிரஸ் செயற்குழு நாளை கூடுகிறது

சென்னை, அக்.27

தமிழககாங்கிரசில்கடந்த சில மாதங்களாக கூட்டணியில் கூடுதல் சீட்டு கேட்க வேண்டும், ஆட்சியில் பங்கு கேட்க வேண்டும் என்ற கோஷம் எழுந்து வருகிறது. இது தொடர்பாக ஏற்கனவே சென்னைக்கு மேலிட பார்வையாளர் வந்திருந்தபோது சில எம்.எல்.ஏ.க்களும், நிர்வாகிகளும் கோரிக்கை வைத்தனர். நிர்வாகிகளின் கருத்தை கேட்ட மேலிட பார்வையாளர், கூட்டணி விவகாரங்கள் பற்றி பொது வெளியில் கருத்து சொல்ல வேண்டாம்; அது பற்றி டெல்லி மேலிடம் முடிவு செய்யும் என்று கூறினார்.




இந்த சூழலில், தமிழக காங்கிரஸ் செயற்குழு கூட்டம் நாளை (ஞாயிற்றுக்கிழமை) மாலை சத்திய மூர்த்தி பவனில் நடைபெறுகிறது. இந்த கூட்டத்தில் செயற்குழு உறுப்பினர்கள் சுமார் 88 பேர் கலந்து கொள்கிறார்கள். மேலிட பார்வையாளர் கிரீஷ் சோடங்கரும் கலந்து கொள்கிறார். ஏற்கனவே காங்கிரஸ் விஜய்யுடன் கூட்டணி அமைக்கும், தற்போதைய கூட்டணி மாறும் என்றெல்லாம் பரபரப்பாக பேசப்படுகிறது. இந்தச் சூழலில், நாளை நடைபெறும் செயற்குழு கூட்டத்தில் கூட்டணி பற்றி தெளிவான முடிவை எடுக்க வேண்டும் என்றும், தொடர்ந்து எந்த கூட்டணியில் இடம் பெற்றாலும் கூடுதல் சீட்டு கேட்க வேண்டும், ஆட்சியில் பங்கும் கேட்க வேண்டும் என்ற தீர்மானத்தையும் நிறைவேற்ற வலியுறுத்த இருப்பதாக கூறப்படுகிறது.

இது பற்றி காங்கிரஸ் மூத்த நிர்வாகிகள் சிலரிடம் கேட்டபோது அவர்கள் கூறியதாவது:

"நாளை நடைபெறும் செயற்குழு கூட்டத்தில் வருகிற தேர்தலை சந்திக்க காங்கிரஸ் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி முக்கியமாக விவாதிக்கப்படும். மேலும் 77 கட்சி மாவட்டங்களுக்கும் புதிய மாவட்ட தலைவர்களை வருகிற டிசம்பர் மாதத்துக்குள் நியமிக்க டெல்லி தலைமை முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக நேரடியாக ஆய்வு செய்ய விரைவில் குழுவும் வர இருக்கிறது. இது பற்றியும் விவாதிக்கப்படும். மேலும் வருகிற ஜனவரி மாதத்தில் இருந்து ராகுல் காந்தி தமிழகத்தில் பிரசாரம் மேற்கொள்ள வரவுள்ளார். தமிழகத்தில் சென்னை, திருச்சி, மதுரை, கோவை உள்ளிட்ட நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இந்த 4 மண்டலங்களிலும் ராகுல் காந்தி பிரசாரம் செய்ய வருவார். ஏற்கனவே பீகாரில் காங்கிரஸ் மிகப்பெரிய நெருக்கடியை சந்தித்தது. தமிழ்நாட்டிலும் தேர்தல் நெருங்கி வரும்போது பேச்சுவார்த்தையில் ஏற்படும் நெருக்கடிகளை தவிர்ப்பதற்காக இப்போதே அது தொடர்பாக தெளிவான முடிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்று செயற்குழு கூட்டத்தில் முடிவெடுக்க திட்டமிட்டுள்ளோம்,"


இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

# வைகை அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட நீர்வளத்துறை அனுமதி

சென்னை, அக்.27

தமிழக அரசு செயலாளர் (நீர்வளத்துறை) வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

27.10.2025 முதல் 31.10.2025 வரை வைகை பூர்வீக பாசன பகுதிIIIற்கு 5 நாட்களுக்கு 624 மி.க.அடியும், 02.11.2025 முதல் 06.11.2025 வரை வைகை பூர்வீக பாசன பகுதிIIற்கு 5 நாட்களுக்கு 772 மி.க.அடியும், 08.11.2025 முதல் 13.11.2025 வரை வைகை பூர்வீக பாசன பகுதிIற்கு 6 நாட்களுக்கு 428 மி.க.அடியும் ஆக மொத்தம்1,824மி.க.அடி தண்ணீரினை வைகை அணையிலிருந்து திறந்து விடவும், மேலும் மார்ச் 2026 வரை வைகை அணையில் வைகை பங்கீட்டு நீர் 1,354 மி.க.அடி எட்டும் போதெல்லாம் வைகை பூர்வீக பாசனப் பகுதி I, II மற்றும் IIIற்கு தண்ணீர் திறப்பு விதிகளின்படி 2:3:7 என்ற விகிதாச்சார அடிப்படையில் தண்ணீரினை வைகை அணையிலிருந்து திறந்துவிட அனுமதி அளித்து அரசு ஆணையிட்டுள்ளது.



இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கருவை கலைக்க கூறிய கணவர்.. கர்ப்பிணி எடுத்த விபரீத முடிவு

திருவண்ணாமலை அக்.27

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி ஆரணிப்பாளையம் தர்மராஜா கோவில் தெருவை சேர்ந்தவர் வேலு என்பவரின் மகள் அஸ்வதி (வயது 23). அதே பகுதியை சேர்ந்தவர் திவாகர் (25). இவர்களுக்கு தியாஸ்ரீ (2) என்ற பெண் குழந்தை உள்ளது. தற்போது 3 மாத கர்ப்பிணியாக அஸ்வதி உள்ளார்.

இந்தநிலையில், கடந்த 22ந் தேதி திவாகர் கர்ப்பத்தை கலைத்து விடு என கூறியதாக தெரிகிறது. இதனால் அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டு, அஸ்வதியை அவரது தாய் விமலா வீட்டுக்கு அழைத்து சென்று விட்டார்.

நேற்று பகலில் அஸ்வதி திவாகர் வீட்டுக்கு வந்துள்ளார். அப்போது உன்னை கருவை கலைக்க சொன்னால் அங்கன்வாடி மையத்தில் குழந்தை பதிவு செய்திருப்பதாக கூறி திவாகர் மீண்டும் தகராறு செய்ததாக கூறப்படுகிறது.



பின்னர் அஸ்வதி தனக்கு உடல் நலம் சரியில்லை, சிறிதுநேரம் தூங்கிவிட்டு வருகிறேன் என்று கூறி அறைக்கு சென்றார். நீண்ட நேரம் ஆகியும் அவர் வெளியே வரவில்லை. இதையடுத்து ஜன்னல் வழியாக பார்த்த போது அஸ்வதி தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டது தெரியவந்தது.

இதுகுறித்து ஆரணி டவுன் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் அஸ்வதிக்கு திருமணமாகி 3 ஆண்டுகளே ஆவதால் ஆரணி வருவாய் கோட்டாட்சியர் சிவா விசாரணை நடத்தி வருகிறார்.

# ஒரே நாளில் 3 முறை தற்கொலைக்கு முயன்ற தொழிலாளி.. 4வது தடவை மேம்பாலத்தில் இருந்து குதித்த போது நடந்த விபரீதம்

திருவண்ணாமலை, அக்.27

திருவண்ணாமலை மாவட்டம்செங்கம்தாலுகா அல்லியந்தல் பகுதியை சேர்ந்தவர் லூக்காஸ் (வயது 45), தொழிலாளி. இவர் கடந்த சில மாதங்களாக மனநலம் பாதிக்கப்பட்டு இருந்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில் நேற்று அவர் வீட்டில் இருந்த போது தனது கழுத்தை அறுத்து கொண்டதாக தெரிகிறது. பின்னர் அவரை அக்கம்பக்கத்தினர் மீட்டு திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு கழுத்தில் 15 தையல் போடப்பட்டது. திடீரென அவர் மருத்துவமனையில் இருந்து வெளியே வந்துள்ளார். பின்னர் அவர் மருத்துவமனை எதிரில் உள்ள திருவண்ணாமலை புறவழி சாலைக்கு சென்று அந்த வழியாக சென்ற ஒரு பஸ்சில் விழுந்து தற்கொலை செய்து கொள்ள முயன்றுள்ளார். அப்போது டிரைவர் சுதாரித்துக்கொண்டு பஸ்சை நிறுத்தினார்.

இதையடுத்து அவர் அங்கிருந்து மருத்துவமனைக்கு அருகில் உள்ள ரெயில்வே மேம்பாலத்துக்கு சென்றார். அந்த சமயத்தில் போளூரில் இருந்து கண்ணாடி லோடு ஏற்றி கொண்டு கன்னியாகுமரி நோக்கி சென்ற லாரியில் விழுந்துதற்கொலைசெய்து கொள்ள முயன்றுள்ளார். இதை கண்டதும் லாரி டிரைவர்வண்டியை நிறுத்தினார். அப்போது அந்த லாரியின் பின்புறம்வேலூரில்இருந்து திருவனந்தபுரம் நோக்கி டைல்ஸ் லோடு ஏற்றி சென்ற லாரி, முன்னே சென்ற லாரியின் மீது மோதி விபத்துக்குள்ளானது. இதனால் 2 லாரியிலும் சேதம் ஏற்பட்டது. தொடர்ந்து லூக்காஸ் யாரும் எதிர்பாராத சமயத்தில் ரெயில்வே மேம்பாலத்தில் இருந்து சுமார் 20 அடி ஆழமுள்ள பள்ளத்தில் குதித்தார். இதில் படுகாயம் அடைந்த அவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

# ரெயில் நிலையங்களில் கூட்ட நெரிசலை தவிர்க்க சிறப்பு திட்டம் சென்னை எழும்பூரில் விரைவில் அமல்

பண்டிகை காலங்கள், வார இறுதி நாட்கள் மற்றும் விடுமுறை நாட்களில் ரெயில் நிலையங்களில் அதிக கூட்ட நெரிசல் காணப்படுகிறது. இந்த பிரச்சினைக்கு தீர்வு காண 'யாத்ரி சுவிதா கேந்திரா' என்ற திட்டத்தை செயல்படுத்த உள்ளதாக மத்திய ரெயில்வே துறை மந்திரி அஸ்வினி வைஷ்ணவ் அறிவித்திருந்தார். இந்த திட்டத்தின்படி, முன்பதிவு டிக்கெட் வைத்திருப்பவர்களுக்கு ரெயில் நிலையங்களில் பிரத்யேக நுழைவு வாயில்கள், முன்பதிவு செய்யாத பயணிகளுக்கு பிரத்யேக காத்திருப்பு அறை மற்றும் நடைமேடைகளை எளிதில் அணுகிட போதிய வசதி ஆகியவை ஏற்படுத்தப்பட உள்ளன. மேலும் தேவையான இடங்களில் நடைமேம்பாலம், சி.சி.டி.வி. கேமராக்கள் மற்றும் கட்டுப்பாட்டு அறைகள் ஆகியவை அமைக்கப்பட உள்ளன. இந்த திட்டம் நாட்டில் முதல் முறையாக டெல்லியில் தொடங்கப்பட்டுள்ள நிலையில், விரைவில் 76 ரெயில் நிலையங்களில் இத்திட்டம் அமல்படுத்தப்பட உள்ளது. அந்த பட்டியலில் சென்னை எழும்பூர் நிலையமும் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தூத்துக்குடியில் ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வார உறுதிமொழி ஏற்பு



தூத்துக்குடி அக்.27

ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 27 முதல் நவம்பர் 2 வரை ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரம் அனுசரிக்கப்பட்டு ஊழல் தடுப்பு உறுதிமொழி எடுக்கப்பட்டு வருகிறது.

அதன்படி தூத்துக்குடி மாவட்ட காவல் அலுவலகத்தில் வைத்து நேற்று தூத்துக்குடி மாவட்ட ஏ.டி.எஸ்.பி.க்கள் ஆறுமுகம், தீபு ஆகியோர் தலைமையில் பின்வருமாறு உறுதிமொழி எடுக்கப்பட்டது.

'நமது நாட்டின் பொருளாதாரம், அரசியல் மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு ஊழல் ஒரு முக்கிய தடையாக உள்ளதாக நான் நம்புகிறேன். அரசு, குடிமக்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவை ஊழலை ஒழிப்பதற்கு ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என நான் நம்புகிறேன்.

நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் எப்போதும் உயர்ந்த நோக்குடன் விழிப்புணர்வு, நேர்மை மற்றும் கண்ணியம் ஆகியவற்றுடன் ஊழலை ஒழிப்பதில் உறுதுணையாக விளங்க வேண்டும் என்பதை நான் நன்கறிவேன். எனவே நான் அனைத்து செயல்களிலும் நேர்மையையும், சட்ட விதிகளையும் பின்பற்றுவேன்.

லஞ்சம் வாங்கவோ அல்லது கொடுக்கவோ மாட்டேன். அனைத்து செயல்களையும் நேர்மை மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் செயல்படுத்துவேன். பொதுமக்களின் நலனுக்காகப் பணியாற்றுவேன்.

தனிப்பட்ட நடத்தையில் நேர்மையை வெளிப்படுத்துவதில் ஒரு முன்னுதாரணமாக செயல்படுவேன்.

ஊழல் தொடர்பான நிகழ்வினை உரிய அதிகார அமைப்பிற்குக் தெரிய ப்படுத்துவேன் என்று உறுதி கூறுகிறேன் என கூறி உறுதிமொழி எடுக்கப்பட்டது. இதில் மாவட்ட காவல் அலுவலக அமைச்சுப் பணி அலுவலர்கள் மற்றும் காவல்துறையினர் கலந்து கொண்டு உறுதிமொழி ஏற்றனர்.

# திருநெல்வேலி: போக்சோ வழக்கு குற்றவாளிக்கு 20 ஆண்டுகள் சிறை

திருநெல்வேலி அக்.27

கடந்த ஆண்டு திருநெல்வேலி மாவட்டம் புலியூர்குறிச்சி ராமகிருஷ்ணாபுரத்தை சேர்ந்த செல்வகுமார் (வயது 57) என்பவர் அதே ஊரை சேர்ந்த 5 வயது சிறுமி ஒருவரிடம் பாலியல் தாக்குதலில் ஈடுபட்டுள்ளார்.

இதுகுறித்து பாதிக்கப்பட்ட சிறுமியின் தாய், நாங்குநேரி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்ததன் பேரில், காவல் துறையினர் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து, புலன் விசாரணை மேற்கொண்டு, செல்வகுமாரை கைது செய்தனர்.

இந்த வழக்கு விசாரணை திருநெல்வேலி மாவட்ட போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில், நீதிபதி சுரேஷ்குமார் வழக்கை விசாரித்து, நீதிமன்ற விசாரணை முடிவுற்ற நிலையில், செல்வகுமாருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு, நேற்று அவருக்கு, 20 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும், ரூ.5 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கினார். மேலும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ரூ.3 லட்சம் நிவாரணத்தொகை வழங்க உத்தரவிட்டு தீர்ப்பளித்தார்.



இந்த வழக்கில் சாட்சிகளை விரைவாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி குற்றவாளிக்கு தண்டனை பெற்றுக் கொடுத்த நாங்குநேரி உட்கோட்ட டி.எஸ்.பி.தர்ஷிகா நடராஜன், வழக்கினை திறம்பட புலன் விசாரணை செய்த போலீஸ் இன்ஸ்பெக்டர் மங்கையர்கரசி மற்றும் காவல்துறையினர், குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தர திறம்பட வாதிட்ட அரசு வழக்கறிஞர் உஷா ஆகியோரை திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி.சிலம்பரசன் பாராட்டினார்.

திருநெல்வேலி மாவட்ட காவல்துறையினரின் தீவிர நடவடிக்கையால், 2025ம் ஆண்டில் மட்டும், இது வரை 22 போக்சோ வழக்குகளில் ஈடுபட்ட 23 குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்று தரப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடத்தக்க வகையில், ஒரு குற்றவாளிக்கு 25 ஆண்டுகள் சிறை தண்டனையும், 4 நபர்களுக்கு ஆயுள் தண்டனையும், 2 சரித்திர பதிவேடு குற்றவாளிக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனையும் பெற்று தரப்பட்டுள்ளது.

மேலும் இந்த ஆண்டில் மட்டும் சரித்திர பதிவேடு உடையநபர்கள்25பேருக்கு தண்டனை பெற்றுத் தரப்பட்டுள்ளது.அதில்கொலை வழக்கில் 21 நபர்களுக்கும், கொலை முயற்சி வழக்கில் 2 நபர்களுக்கும், போக்சோ வழக்கில் 2 நபர்களுக்கும் தண்டனை பெற்று தரப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்ட காவல்துறையானது பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதோடு, அவர்களுக்கெதிராக குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகள் மீது தனிப்பட்ட கவனத்துடன் தீவிரமான மற்றும் தொடர்ச்சியான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என மாவட்ட காவல்துறை தெரிவித்துள்ளது.

# முதல்அமைச்சரின் நிகழ்ச்சிக்காக பனை மரங்கள் வெட்டப்பட்டதா? தமிழக அரசு விளக்கம்



சென்னை, அக்.27

தென்காசி மாவட்டத்தில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினின் நிகழ்ச்சிகளுக்காக ஏராளமான பனைமரங்கள்சட்டத்துக்கு புறம்பாக வெட்டப்பட்டதாக செய்தி பரப்பப்படுகிறது. இதற்கு தமிழ்நாடு அரசின் தகவல் சரிபார்ப்பகம் விளக்கம்அளித்திருக்கிறது.

அதில், 'இது தவறான தகவல். 2 தனிநபர்கள் தங்களின்பட்டாநிலத்தில் ஆபத்தான நிலையில் உள்ள 4 பனை மரங்களை உரிய அனுமதி பெற்று வெட்டியுள்ளனர். அதற்கு இணையாக அரசாணை 238ன்படி, ஒரு மரத்துக்கு 10 என்ற விதத்தில் 40 பனை மரக்கன்றுகளை நட்டு வளர்த்திடவும் மாவட்ட கலெக்டரால் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குரூப்4 தேர்வில் தோல்வி: இளம்பெண் எடுத்த விபரீத முடிவு

தென்காசி அக்.27

தென்காசி மாவட்டம் முப்புலியூரைச் சேர்ந்தவர் ரவிச்சந்திரன். இவரது மகள் சத்தியரூபா (21 வயது). இவர் ஒரு கல்லூரியில் பட்டப்படிப்பு முடித்துவிட்டு அரசு பணி தேர்வுக்கு படித்து வந்தார். சமீபத்தில் நடந்த டி.என்.பி.எஸ்.சி. குரூப்4 தேர்வை சத்திய ரூபா எழுதி இருந்தார். தேர்வு முடிவுகள் வெளியான நிலையில், அவர் தேர்ச்சி பெறவில்லை.

இதனால் குடும்பத்தினர், அவருக்கு திருமணம் செய்து வைக்க ஏற்பாடு செய்ததாக கூறப்படுகிறது. தேர்வில் தோல்வி மற்றும் திருமணம் செய்ய விரும்பம் இல்லாததால் சத்திய ரூபா மனவிரக்தியில் இருந்து வந்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம்அவர்திடீரென்று பூச்சிக்கொல்லி மருந்தை (விஷம்) குடித்து மயங்கினார். இதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த குடும்பத்தினர் அவரை மீட்டு தென்காசி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி சத்தியரூபா பரிதாபமாக இறந்தார்.

# பள்ளி மாணவர்களுக்கான பிரதம மந்திரியின் கல்வி உதவித்தொகை பெற 31ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்




தூத்துக்குடி அக்.28

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

இதர பிற்படுத்தப்பட்டோர், பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள், சீர்மரபினர் (BC/ MBC/DNC) ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் வகையில் பிரதம மந்திரியின் கல்வி உதவித்தொகை திட்டம் PMYASASVITop Class Education in Schools for OBC, MBC & DNT students மத்திய அரசால் செயல்படுத்தப்படவுள்ளது.

202526ம் ஆண்டிற்கு தேசிய கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க பட்டியிலிடப்பட்ட (Top Class Schools) பள்ளிகளில் பயிலும் தமிழகத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு இந்த கல்வி உதவித்தொகை வழங்கப்பட உள்ளது. இந்த திட்டத்திற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.2.50 லட்சம் ஆகும். இந்த திட்டத்தின் கீழ் மாணவர்கள் விண்ணப்பிப்பதற்கு கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ள நாள்: 31.10.2025. கல்வி நிறுவனங்கள்விண்ணப்பத்தினை சரிபாக்க கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ள நாள்: 15.11.2025.

புதுப்பித்தல்:

இந்த திட்டத்தின் கீழ் கடந்த நிதியாண்டில் பயனடைந்த மாணவ, மாணவியர்கள் தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் (https://scholarships.gov.in) (National Scholarship Portal) Renewal Application என்ற இணைப்பில் (Link) சென்று OTR Number (One Time Registration) பதிவு செய்து 202526ம் ஆண்டிற்கான விண்ணப்பத்தினை புதுப்பித்தல் (Renewal) மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

புதியது:

இந்த திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் புதியதாக விண்ணப்பிக்க விரும்பும் 9 மற்றும் 11ம் வகுப்புகளில் பட்டியிலிடப்பட்ட பள்ளிகளில் பயிலும் மாணவ/ மாணவியர்கள், தேசிய கல்வி உதவித்தொகைத் தளத்தில் தங்களது கைப்பேசி எண் (Mobile Number) மற்றும்ஆதார்விவரங்களை உள்ளீடு செய்தால் OTR Number & Password பதிவு செய்யப்பட்ட கைப்பேசி எண்ணிற்கு வரப்பெறும்.

மேற்சொன்னபடி வந்த OTR Numberஐ பயன்படுத்தி 2025 26 ம் ஆண்டிற்கான கல்வி உதவித்தொகைக்கு உரிய ஆவணங்களை பதிவேற்றம் செய்து புதியது (Fresh Application) விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் பட்டியிலிடப்பட்ட பள்ளிகளின் விவரங்களை அறிந்திட தொடர்புடைய முதன்மை கல்வி அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம். https://bcmbcmw.tn.gov.in/welfschemes.htm என்ற இணையதளம் மூலம் காணலாம்.

கல்வி நிறுவனங்கள் மாணவ/மாணவியர்கள் விண்ணப்பித்துள்ள விண்ணப்பங்களை தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் பரிசீலித்து அடுத்த நிலையில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் அலுவலருக்கு அனுப்புதல் வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளும்போது தொடர்புடைய பள்ளி தலைமை ஆசிரியர் Login Credential சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

இந்த திட்டம் தொடர்பான கூடுதல் விபரங்கள் அறிந்திட தேசிய கல்வி உதவித்தொகை (NSP) https://scholarships.gov.in என்ற இணையதளத்தினை அணுகி மேற்சொன்ன வழிமுறைகளைப் பின்பற்றி குறிப்பிட்ட காலகெடுவிற்குள் விண்ணப்பித்து கல்வி உதவித் தொகை பயன்களைப் பெற்று கொள்ளலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தென்காசி ஹனீபா குற்றவாளி என அறிவிப்பு: தண்டனை விவரம் நாளை வெளியாகிறது



மதுரை, அக்.27

பா.ஜனதாவின் மூத்த தலைவர்எல்.கே.அத்வானி கடந்த 2011ம் ஆண்டு தமிழ்நாட்டில் ரத யாத்திரை சென்றார். அப்போது மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே ஆலம்பட்டி பாலத்தின் அடியில் பைப் வெடிகுண்டு வைத்து அவரை கொல்ல முயற்சி நடந்தது. இதுதொடர்பாக முகமது ஹனீபா என்ற தென்காசி ஹனீபா உள்ளிட்டோர் மீது திருமங்கலம் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

இந்த வழக்கில் சிக்கிய பலர் தொடர்ந்து தலைமறைவாக இருந்து வந்தனர். அவர்களில் ஒருவரான தென்காசி ஹனீபாவுக்கு ஜாமீனில் வெளிவர முடியாத பிடிவாரண்டு உத்தரவை கோர்ட்டு பிறப்பித்தது. இவர் உள்ளிட்டோரை போலீசார் தொடர்ந்து தேடி வந்தனர். அப்போது வத்தலக்குண்டு அருகே பதுங்கி இருந்த தென்காசி ஹனீபாவை போலீசார் பிடிக்க முயன்றனர். அப்போது அவர் போலீசாரைகத்தியால்குத்திவிட்டு தப்பிக்க முயன்றதாக வத்தலக்குண்டு போலீசார் கொலை முயற்சி வழக்கு பதிவு செய்தனர்.

பின்னர் கைதான அவரிடம் இருந்து வெடி பொருட்கள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டன. இந்த கொலை முயற்சி வழக்கை விசாரித்த திண்டுக்கல் மாவட்ட முதன்மை கோர்ட்டு, தென்காசி ஹனீபாவை இந்த வழக்கில் இருந்து விடுவித்தது.

இதை எதிர்த்து கோவை சி.பி.சி.ஐ.டி. போலீஸ் தரப்பில், மதுரை ஐகோர்ட்டில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த மனு நீதிபதிகள் வேல்முருகன், விக்டோரியா கவுரி ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள், இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் ஆதாரப்பூர்வமாக உள்ளன. சம்பந்தப்பட்ட நபரிடம் இருந்து கைப்பற்றியவை உண்மையான வெடிபொருட்கள் தான் என்று வெடிமருந்து ஆணையமும் உறுதிப்படுத்தி உள்ளது.

எனவே இந்த வழக்கில் ஹனீபாவை விடுவித்த திண்டுக்கல் மாவட்ட கோர்ட்டின் உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. தென்காசி ஹனீபா குற்றவாளி என இந்த கோர்ட்டு முடிவு செய்கிறது. எனவே அவருக்கான தண்டனை விவரம் வருகிற 28ந்தேதி (நாளை மறுநாள்) தெரிவிக்கப்படும். அன்றைய தினம் அவர் இந்த கோர்ட்டில் ஆஜராக வேண்டும் என்றுநீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# தென்காசியில் விஷம் வைத்து 50 மயில்கள் சாகடிப்பு



தென்காசி, அக்.27

தென்காசி மாவட்டம் குருவிகுளத்தில் யூனியன் அலுவலகம் உள்ளது. இந்த அலுவலக பகுதியில் தினமும் ஏராளமான மயில்கள் சுற்றி வருவது வழக்கம். இந்த அலுவலகம் பின்னால் உள்ள மீனாட்சிபுரம் பகுதியைச் சேர்ந்தவர் ஜான்சன்.

விவசாயியான இவர் தனக்கு சொந்தமான விவசாய தோட்டத்தில் 1 ஏக்கர் பரப்பளவில் மக்காச்சோளம் பயிரிட்டுள்ளார். விளைவித்த பயிர்கள் நன்கு வளர்ந்து வரும் நிலையில் அதை பறவை இனங்களில் இருந்து பாதுகாப்பதற்காக அவர் நடவடிக்கை மேற்கொண்டார்.

அதாவது, பயிர்களை சுற்றி நிலத்தில் எலி மருந்து (விஷம்) தடவிய மக்காச்சோளங்களை தூவியதாக கூறப்படுகிறது. நேற்று அந்த பகுதிக்கு ஏராளமான மயில்கள் வந்தன. நிலத்தில் தூவிய எலி மருந்து கலந்த பயிர்களை அவை தின்றன. இதையடுத்து சிறிது நேரத்தில் அடுத்தடுத்து மயில்கள் மயங்கி விழுந்து செத்தன.

இதை அந்த வழியாக சென்றவர்கள் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். இது குறித்து உடனடியாக புளியங்குடி வனத்துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. வனத்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து பார்வையிட்டனர். ஒட்டுமொத்தமாக சுமார் 50 மயில்கள் விஷம் வைத்து சாகடிக்கப்பட்டது தெரியவந்தது. மேலும் கால்நடை டாக்டர்கள் வரவழைக்கப்பட்டனர். அவர்கள் மயில்களை பிரேத பரிசோதனை செய்தனர். பின்னர் அதே இடத்தில் பொக்லைன் எந்திரம் மூலம் குழித்தோண்டி மயில்கள் புதைக்கப்பட்டன. சட்ட விரோதமாக எலிமருந்து வைத்து 50 மயில்களை சாகடித்த ஜான்சனை வனத்துறையினர் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருநெல்வேலி: மிரட்டல் வழக்கில் தலைமறைவான நபர் கைது

திருநெல்வேலி அக்.27

திருநெல்வேலி மாவட்டம், மானூர் பகுதியில் கடந்த 2015ம் ஆண்டு மிரட்டல் வழக்கில் ஈடுபட்ட எட்டான்குளத்தை சேர்ந்த மாரியப்பன் (வயது 31) என்பவர் கைது செய்யப்பட்டு ஜாமீனில் வெளிவந்தார். இவர் நீதிமன்ற விசாரணைக்கு 1 ஆண்டு 4 மாதங்கள் ஆஜராகாமல் தலைமறைவாக இருந்து வந்ததால் அவருக்கு நீதிமன்றத்தில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து மாரியப்பனை மானூர் போலீசார் தேடிவந்த நிலையில் நேற்று கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி உரிய சட்ட நடவடிக்கைமேற்கொண்டு வருகின்றனர்.

# நாமக்கல் மண்டலத்தில் முட்டை ஏற்றுமதி 17¾ கோடியாக அதிகரிப்பு



நாமக்கல், அக்.27

நாமக்கல் மண்டலத்தில் 1,100க்கும் மேற்பட்ட கோழிப்பண்ணைகள் உள்ளன. இவற்றில் 8 கோடிக்கும் மேற்பட்ட முட்டையின கோழிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் நாள் ஒன்றுக்கு ஏறத்தாழ 6 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் கடந்த மாதம் (செப்டம்பர்) முட்டை ஏற்றுமதி 17 கோடியே 90 லட்சமாக அதிகரித்து உள்ளது. ஆகஸ்டு மாதத்தை ஒப்பிடுகையில் கடந்தமாதத்தில்1 கோடியே 23 லட்சம் முட்டைகள் ஏற்றுமதி அதிகரித்து உள்ளது. இதனால் பண்ணையாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# சொத்து வரி செலுத்தாதவர்களுக்கு நோட்டீஸ் அனுப்ப சென்னை மாநகராட்சி முடிவு



சென்னை, அக்.27

சென்னை மாநகராட்சிக்கு சொத்து வரி, தொழில் வரி ஆகியவை பிரதான வருவாயாக உள்ளது. சுமார் 13.5 லட்சம் சொத்து உரிமையாளர்கள் மூலம் மாநகராட்சிக்கு சொத்து வரி மூலம் வருவாய் கிடைக்கிறது. அதன்படி, சென்னை மாநகராட்சிக்கு முதல் அரையாண்டுக்கான சொத்து வரியை ஏப்ரல் 1ந்தேதி முதல் செப்டம்பர் 30ந்தேதி வரையிலும், 2வது அரையாண்டுக்கான சொத்து வரியை அக்டோபர் 1ந்தேதி முதல் மார்ச் 31 ந்தேதி வரையிலும் செலுத்த வேண்டும்.

202526ம் நிதியாண்டின் முதல் அரையாண்டுக்கான சொத்து வரி கடந்த ஏப்ரல் மாதம் முதல் வசூலிக்கப்பட்டு வந்தது. மாநகராட்சியின் வரி வசூலிப்பாளர்கள் மூலமும், இணையதளம் வாயிலாகவும் வரி வசூல் நடைபெற்றது. முதல் அரையாண்டுக்கான சொத்து வரி வருவாய் ரூ.1,300 கோடி வரையில் வசூல் செய்ய மாநகராட்சி இலக்கு நிர்ணயித்தது. ஆனால், ரூ.1,002 கோடி மட்டுமே வசூலானது. சுமார் 2 லட்சம் பேர் வரையில் சொத்து வரியை செலுத்தாமல் நிலுவை வைத்துள்ளதாகவும் கூறப்பட்டது. இந்த நிலையில், முதல் அரையாண்டுக்கான சொத்து வரியை செலுத்தாத நபர்கள் வரும் 31ந்தேதிக்குள் சொத்து வரியை செலுத்திட வேண்டுமென மாநகராட்சிசார்பில்காலநீட்டிப்பு வழங்கப்பட்டது. வருகிற 31ந்தேதிக்குள் சொத்து வரி செலுத்தாத நபர்களுக்கு நோட்டீஸ் அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது. ரூ.1 கோடிக்கு மேல் நிலுவை வைத்துள்ள நபர்களின் வீடுகளுக்கு நேரடியாக சென்று எச்சரிக்கை அறிவிப்பு ஒட்டப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, சென்னை மாநகராட்சி அதிகாரி ஒருவர் கூறியதாவது: சென்னை மாநகராட்சியில் 2வது அரையாண்டுக்கான சொத்து வரி கடந்த 1ந்தேதி முதல் வசூலிக்கப்பட்டு வருகிறது. கடந்த 24 நாட்களில் ரூ.265 கோடி சொத்து வரி வசூலிக்கப்பட்டுள்ளது. வரும் 31ந்தேதிக்குள் சொத்து வரியை செலுத்தும் நபர்களுக்கு மாநகராட்சி சார்பில் 5 சதவீதம், அதிகபட்சமாக ரூ.5 ஆயிரம் வரை தள்ளுபடி வழங்கப்படும்.

இதுபோக, முதல் அரையாண்டுக்கான சொத்து வரியை செலுத்தாமல் உள்ள நபர்கள் குறித்த விவரங்களை சேகரித்து வருகிறோம். அவர்களுக்கு அடுத்த மாதம் 1ந்தேதி முதல் நோட்டீஸ் அனுப்ப இருக்கிறோம். ரூ.1 கோடிக்கு மேல் நிலுவை வைத்துள்ள நபர்களின் வீடுகளுக்கு நேரடியாக சென்று மாநகராட்சி அதிகாரிகள் நோட்டீஸ் ஒட்டுவார்கள்.

அபராதம் விதிப்பது குறித்தும் ஆலோசித்து வருகிறோம். அந்த வகையில், 2வது அரையாண்டுக்கான சொத்து வரி ரூ.1,400 கோடி வரையில்வசூலிக்கஇலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# சிறுமிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்தவருக்கு 5 ஆண்டுகள் சிறை; சென்னை 'போக்சோ கோர்ட்டு தீர்ப்பு




சென்னை, அக்.27

சென்னை சைதாப்பேட்டை பகுதியைச் சேர்ந்த 7 வயது சிறுமி, கடந்த 2021ம் ஆண்டு வீட்டுக்கு வெளியே விளையாடி கொண்டிருந்தார். அப்போது, சிறுமியின் வீட்டுக்கு எதிரே வசித்து வந்த வெங்கடேசன் (47 வயது) என்பவர் சிறுமிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளார். சிறுமியின் தாயார் வீட்டில் இல்லாத நேரத்திலும் அவர், சிறுமிக்கு தொடர்ந்து பாலியல் ரீதியாக தொந்தரவு கொடுத்து வந்துள்ளார்.

இதுகுறித்து, சிறுமியின் பெற்றோர் அளித்த புகாரின் பேரில் சைதாப்பேட்டை அனைத்து மகளிர் போலீசார் வழக்குப்பதிவு செய்து வெங்கடேசனை கைது செய்தனர். இந்த வழக்கு விசாரணை சென்னை போக்சோ சிறப்பு கோர்ட்டில் நீதிபதி எஸ்.பத்மா முன்னிலையில் நடந்தது. வழக்கை விசாரித்த கோர்ட்டு, வெங்கடேசன் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாக கூறி, அவருக்கு 5 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ.5 ஆயிரம் அபராதம் விதித்து தீர்ப்பு கூறினார்.

மேலும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு தமிழக அரசு இழப்பீடாக ரூ.50 ஆயிரம் வழங்கவும் நீதிபதி உத்தரவு பிறப்பித்தார்.

தினகனி
NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253



# குற்றாலம் மெயின் அருவியில் குளிக்க அனுமதி...!



தென்காசி, அக்.27

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து வருகிறது. இதன் காரணமாக மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்தது. இதனால் தென்காசி மாவட்டத்தில் உள்ள குற்றால அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதையடுத்து கடந்த 16ம் தேதி முதல் குற்றால அருவிகளில் குளிக்க தடை விதிக்கப்பட்டிருந்தது.

குற்றாலத்தில் உள்ள மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றால அருவி, சிற்றருவி, புலியருவி உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், குற்றால மெயின் அருவில் குளிக்க சுற்றுலா பயணிகளுக்கு இன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வெள்ளப்பெருக்கு குறைந்து அருவில் நீர் வரத்து சீரானதையடுத்து குற்றால மெயின் அருவில் குளிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனால் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

# சென்னை விமான நிலையத்தில் 2 நாட்களில் பல கோடி மதிப்பிலான உயர் ரக கஞ்சா பறிமுதல்



சென்னை, அக்.27

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் பல்வேறு நாடுகளுக்கு சென்றுவிட்டு சொந்த நாட்டுக்கு திரும்பும் பயணிகளிடம் சுங்க அதிகாரிகள் சோதனை செய்வது வழக்கம். அந்த வகையில், தாய்லாந்து நாட்டு தலைநகர் பாங்காக்கில் இருந்து விமானம் வந்தது. அதில் சென்னையை சேர்ந்த 30 வயது மதிக்கத்தக்க வாலிபர் சுற்றுலா பயணியாக தாய்லாந்து சென்றுவிட்டு திரும்பி வந்திருந்தார்.

அவர் மீது சந்தேகம் அடைந்த சுங்க இலாகா நுண்ணறிவு பிரிவு அதிகாரிகள், வாலிபரிடம் இருந்த சூட்கேசை பரிசோதித்தனர். அதில் பதப்படுத்தப்பட்ட உணவு என காற்று புகாத பிளாஸ்டிக் பாக்கெட்டுகள் வைத்திருந்தார். அவற்றை பிரித்து பார்த்தபோது உயர் ரக, பதப்படுத்தப்பட்ட கஞ்சாவை கடத்தி வந்தது தெரிந்தது.

அவரிடம் இருந்து ஏறக்குறைய ஒன்றரை கிலோ உயர் ரக கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. அதன் சர்வதேச மதிப்பு ஒன்றரை கோடிரூபாய் இருக்கும் எனகூறப்படுகிறது. அவரை சுங்க இலாகா அதிகாரிகள் கைது செய்து, இந்த கடத்தலின் பின்னணியில் இருப்பவர்கள் தொடர்பாக விசாரித்து வருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை காலையில் தாய்லாந்து நாட்டில் இருந்து சென்னை விமான நிலையத்திற்கு வந்த விமானத்தில் வடஇந்திய மாநிலத்தில் இருந்து வந்த நபர் ஒருவரை சந்தேகத்தின் அடிப்படையில் சுங்க இலாகா அதிகாரிகள் தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர்.

அப்போது அவர், அதிகாரிகளிடம் முன்னுக்குப்பின் முரணான பதில்களை கூறினார். இதனை தொடர்ந்து அவரை பரிசோதனை செய்ததில், உடைகளின் உள்ளே 10 கிலோ எடை கொண்ட உயர் ரக கஞ்சாவை பதுக்கி வைத்து இருந்தது தெரிய வந்தது. அதன் மதிப்பு ரூ.10 கோடி என கூறப்படுகிறது. அவர் தாய்லாந்து நாட்டுக்கு சுற்றுலா விசாவில் சென்று திரும்பும்போது இந்த கடத்தல் நடந்துள்ளது தெரிய வந்துள்ளது.

இதில் சர்வதேச கடத்தல் கும்பலுக்கும் தொடர்பு உள்ளது என சந்தேகிக்கப்படுகிறது. கமிஷன் அடிப்படையில் இந்த நபர் வேலை செய்துள்ளார். இதனால், சென்னை விமான நிலையத்தில் 2 நாட்களில் பல கோடி மதிப்பிலான உயர் ரக கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டு உள்ளது. இது தொடர்பாக விரிவான விசாரணை நடந்து வருகிறது.

# ஓரினசேர்க்கை விவகாரத்தில் என்ஜினீயரிங் மாணவர் தற்கொலை: ஆசிரியர் கைது



சென்னை, அக்.27

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் அருகே உள்ள ஒரு பகுதியை சேர்ந்த 20 வயது நிரம்பியவர், மதுரை அண்ணா பல்கலைக்கழகத்தில் கம்யூட்டர் சயின்ஸ் இரண்டாம் ஆண்டு படித்து வந்தார். தீபாவளி பண்டிகைக்காக ஊருக்கு வந்து இருந்த அந்த மாணவர் கடந்த 23ந் தேதி இரவு வீட்டில் இருந்து வெளியில் சென்றார். நீண்ட நேரமாகியும் அவர் வீட்டிற்கு திரும்பி வரவில்லை.

அவரை பல்வேறு இடங்களில் தேடிப்பார்த்தனர். நேற்று முன்தினம் காலையில் மல்லிப்பட்டினம் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் அவர் இறந்து கிடந்தார். அப்போது பள்ளிக்கு வந்தவர்கள் அவர் இறந்து கிடப்பது குறித்து சேதுபாவாசத்திரம் போலீசாருக்கு தகவல் அளித்தனர். அங்கு வந்த போலீசார், மாணவரின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக பட்டுக்கோட்டை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்து விசாரணை நடத்தினர்.

மேலும் இறந்து கிடந்த மாணவர், இறப்பதற்கு முன்பாக பள்ளி சுவரில், என் சாவுக்கு காரணம் பாபு என எழுதி வைத்து இருந்தார். இதனைத்தொடர்ந்து யார் அந்த பாபு? என போலீசார் விசாரித்தனர். அப்போது, பாபு, அந்த பள்ளியில் ஆங்கில ஆசிரியராக பணியாற்றி வருபவர் என்பது தெரியவந்தது. இதனையடுத்து போலீசார், ஆசிரியர் பாபுவிடம் விசாரணை நடத்தினர்.

விசாரணையில் கிடைத்த தகவல்கள் குறித்து போலீசார் தெரிவித்ததாவது:

பள்ளி வளாகத்தில் இறந்து கிடந்த என்ஜினீயரிங் மாணவர், மல்லிப்பட்டினம் அரசு மேல்நிலைப்பள்ளியில் படித்தபோது அந்த பள்ளியில் பணிபுரிந்த ஆசிரியர் பாபுவுக்கும், மாணவருக்கும் ஓரின சேர்க்கை பழக்கம் ஏற்பட்டுள்ளது. கடந்த 3 மாதங்களாக, விடுமுறைக்கு அந்த மாணவர் ஊருக்கு வரும்போதும், செல்போனிலும் ஆசிரியர் பாபுவுக்கு ஓரின சேர்க்கை தொல்லை கொடுத்து வந்ததாக கூறப்படுகிறது.

ஆனால் ஆசிரியர் பாபு, இனிமேல் இந்த பழக்கத்தை தொடர வேண்டாம் என்று மாணவரை கண்டித்து உள்ளார். மேலும் அவரது மொபைல் எண்ணையும் 'பிளாக்' செய்துள்ளார். அந்த மாணவரின் செயல்பாடுகள் குறித்து அவரது பெற்றோர் மற்றும் அவரது அண்ணனிடம் ஆசிரியர் பாபு கடந்த சில நாட்களுக்கு முன்பு கூறியுள்ளார். இதனால் அதிர்ச்சியடைந்த மாணவரின் பெற்றோர், இனிமேல் எந்த தொந்தரவும் வராது என ஆசிரியர் பாபுவிடம் உறுதியளித்துள்ளனர். இந்த நிலையில் சம்பவத்தன்று அந்த மாணவரை அவரது அண்ணன் கண்டித்து கல்லூரிக்கு செல்ல பஸ் நிறுத்தத்தில் விட்டு விட்டு சென்றுள்ளார். இதனால் மனமுடைந்த அந்த மாணவர், ஆசிரியர் பாபுவை பழி தீர்த்து அவருக்கு கெட்ட பெயர் வர வேண்டும் என்பதற்காக பள்ளி வளாகத்தில் தற்கொலை செய்து கொண்டு என் சாவுக்கு காரணம் ஆசிரியர் பாபு என்று சுவரில் எழுதி வைத்து உள்ளார். மேற்கண்ட தகவலை போலீசார் தெரிவித்தனர். மாணவரை தற்கொலை செய்ய தூண்டியதாக அவரது அண்ணன் கொடுத்த புகாரின் பேரில் சேதுபாவாசத்திரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து ஆசிரியர் பாபுவை(40) கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (27.10.2025)

**மேஷம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும் நாள். நண்பர்களிடம் இருந்து ஆதரவு கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் சிறிய லாபம் உண்டு.

**ரிஷபம்:** உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கும் நாள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். செலவுகள் கட்டுப்பாட்டில் இருக்கும்.

**மிதுனம்:** சில எதிர்பாராத தடை ஏற்பட்டாலும் அதைக் கடந்து முன்னேறுவீர்கள். நண்பர்கள் உங்களை ஊக்குவிப்பர்.

**கடகம்:** வீட்டு வேலைகளில் அதிக ஈடுபாடு. உடல் சோர்வு இருந்தாலும் மனநிம்மதி உண்டு. புதிய உறவு உருவாக வாய்ப்பு.

**சிம்மம்:** தன்னம்பிக்கையுடன் செயல்படுங்கள், சாதனை உங்கள் பக்கம். அதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

**கன்னி:** நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும் நாள். சொத்து சம்பந்தமான விவகாரத்தில் நல்ல முடிவு.

**துலாம்:** புதிய வாய்ப்புகள் வரலாம். அதிர்ஷ்டம் உங்களுடன் இருக்கும். நண்பர்கள் நம்பிக்கையுடன் நடப்பர்.

**விருச்சிகம்:** உடல்நலம் கவனிக்க வேண்டிய நாள். உறவினர்களிடம் நிதானமாக பேசுங்கள். பொறுமை தேவை.

**தனுசு:** வெளிநாட்டுச் செய்தி உங்களை மகிழ்விக்கும். கல்வியில் முன்னேற்றம். தொழிலில் புதிய வாய்ப்பு.

**மகரம்:** அழுத்தமான பணி இருந்தாலும் மனநிம்மதி உண்டு. குடும்பத்தில் நல்ல செய்தி கேட்பீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சி தொடங்க சிறந்த நாள். தொழிலில் முன்னேற்றம் உண்டு. எதிரிகள் விலகுவர்.

**மீனம்:** மன அமைதி பெறுவீர்கள். உறவினர்கள் மதிப்புடன் நடப்பர். நீண்டநாள் குழப்பம் தீரும்.

# வானிலை மாற்றம் எதிரொலி: நாகை இலங்கை பயணிகள் கப்பல் சேவை நிறுத்தம்



நாகப்பட்டினம்
அக்.27

நாகை இலங்கை காங்கேசன்துறை இடையிலான கப்பல் போக்குவரத்து சேவை கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14ந்தேதி முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்த கப்பலில் நாள்தோறும் இலங்கையில் இருந்தும், இந்தியாவில் இருந்தும் சுற்றுலா பயணிகள், வியாபாரிகள், வெளிநாட்டினர் என ஏராளமானோர் பயணம் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்ததாலும், வானிலை மாற்றத்தின் காரணமாகவும் இன்று (ஞாயிற்றுக்கிழமை) முதல் வரும் டிசம்பர் மாதம் வரை நாகை இலங்கை இடையிலான பயணிகள் கப்பல் சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது என்று கப்பல் நிறுவனம் அறிவித்து உள்ளது. கப்பலில் செல்ல இரு மார்க்கத்திலும் முன்பதிவு செய்த பயணிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

## ராஷ்மிகா மந்தனாவுக்கு முகத்தில் சிகிச்சை: போட்டோவுக்கு 'போஸ்' தர மறுப்பு



தென்னிந்திய சினிமாவில் அறிமுகமான ராஷ்மிகா மந்தனா, இப்போது பாலிவுட்டிலும் நடித்து வருகிறார். அவர் நடித்து சமீபத்தில் வெளியான 'தம்மா' படம் வரவேற்பைப் பெற்றுள்ளது. அடுத்து 'காக்டெயில் 2' என்ற இந்திப் படத்தில் கீர்த்தி சனோன், ஷாகித் கபூருடன் நடிக்க இருக்கிறார். தற்போது பெண்களை மையமாக கொண்ட தி கேர்ள் பிரண்ட் படத்தில் நடித்துள்ளார். ராகுரவீந்திரன இயக்கிய இந்தப் படத்தில் தீட்சித் ஷெட்டி ஹீரோவாக நடித்துள்ளார்.

அவர் விமான நிலையம் வந்தால் புகைப்படக் கலைஞர்களுக்கு போஸ் கொடுப்பது வழக்கம். ஆனால், மும்பை விமான நிலையத்துக்கு மாஸ்க் அணிந்து நேற்று முன்தினம் வந்த அவர், போஸ் கொடுக்க மறுத்துவிட்டார். மாஸ்க்கையும் நீக்க மறுத்த அவர், முகத்தில் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்றார். இதுகுறித்த வீடியோ வைரலானதை அடுத்து அவருக்கு என்ன ஆச்சு? என்று ரசிகர்கள் கேட்டு வருகின்றனர். அவர் அழகுக்காக முகத்தில் அறுவை சிகிச்சை செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

## ரஜினிகாந்துடன் நடிகர் ராகவா லாரன்ஸ் சந்திப்பு



ராகவா லாரன்ஸ் நடிப்பில் இறுதியாக சந்திரமுகி 2 மற்றும் ஜிகர்தண்டா டபுள் எக்ஸ் ஆகிய படங்கள் வெளியாகின. இதில் ஜிகர்தண்டா படத்தின் இரண்டாம் பாகத்தில் ராகவாவின் நடிப்பு பெரிதளவில் பாராட்டப்பட்டது. இதைத் தொடர்ந்து அவர் அடுத்தடுத்து பல படங்களில் கமிட்டாகி வருகிறார். அவர் நடிப்பில் தற்போது பென்ஸ் மற்றும் ஹண்டர் ஆகிய திரைப்படங்கள் உருவாகின்றன. இதில் பென்ஸ் படத்தை இயக்குநர் லோகேஷ் கனகராஜ் தயாரிக்கிறார். ரெமோ, சுல்தான் படங்களை இயக்கிய பாக்கியராஜ் கண்ணன் இப்படத்தை இயக்குகிறார்.

இதுதவிர மற்றொரு திரைப்படம் ஹண்டர். மாபெரும் பட்ஜெட்டில் மிகவும் பிரம்மாண்டமாக உருவாகும் இப்படத்தை சத்யஜோதி நிறுவனம் தயாரிக்கிறது. இப்படத்தை வெங்கட் மோகன் இயக்குகிறார். இத்திரைப்படத்திற்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசை அமைக்கிறார். மேலும், இது ராகவா லாரன்ஸ் நடிக்கும் 25வது திரைப்படமாகும்.

இதுவரையில் பலருக்கு தனிப்பட்ட முறையில் உதவிகள் செய்துவந்த நடிகர் ராகவா லாரன்ஸ், சேவையே கடவுள் எனும் நோக்கத்தில் "மாற்றம்" என்ற பெயரில் புதிய அறக்கட்டளை ஒன்றைத் துவக்கியுள்ளார். இந்த அறக்கட்டளை மூலம் பலருக்கு உதவிகளை செய்து வருகிறார். இந்த அறக்கட்டளையில் முன்னணி நடிகர் எஸ்.ஜே. சூர்யா மற்றும் கலக்கப்போவது யாரு பாலா, அறந்தாங்கி நிஷா ஆகியோர் இணைந்து செயல்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் ராகவா லாரன்ஸ் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தை நேரில் சந்தித்து ஆசி பெற்றுள்ளார். இது குறித்து தனது எக்ஸ்தளபதிவில்கூறியிருப்பதாவது, "சிலமாதங்களுக்குப்பிறகுஇன்றுதலைவருடன்தரமானநேரத்தைச்செலவிட்டதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அவருடன் பகிர்ந்து கொள்ளக் கிடைக்கும் ஒவ்வொரு தருணத்தையும் நான் உண்மையிலேயே போற்றுகிறேன்" என ரஜினிகாந்துடன் உள்ள புகைப்படத்தை வெளியிட்டுள்ளார்.

## ஜி.டி.நாயுடுவின் வாழ்க்கை வரலாற்று படம்.. பர்ஸ்ட் லுக் டீசர் வெளியீடு




நிஜ வாழ்க்கையில் ஏதோ ஒரு துறையில் சாதனை செய்தவர்களின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு திரைப்படங்கள் அவ்வப்போது உருவாகி வருகிறது. அந்த வகையில் முன்னாள் இஸ்ரோ விஞ்ஞானி நம்பி நாராயணனின் வாழ்க்கை வரலாற்று படத்தை 'ராக்கெட்ரி: தி நம்பி எபெக்ட்' என்ற பெயரில் மாதவன் இயக்கி நடித்திருந்தார். இப்படம் கடந்த 2022ம் ஆண்டு வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது. வர்கீஸ் மூலன் பிக்சர்ஸ் மற்றும் ட்ரைகலர் பிலிம்ஸ் நிறுவனங்கள் தயாரித்த இப்படம் சிறந்த திரைப்படத்திற்கான தேசிய விருதை பெற்றது.

அதனை தொடர்ந்து எந்திரவியல் மற்றும் விவசாயம் சார்ந்த துறைகளில் எண்ணற்ற ஆராய்ச்சிகளை செய்த மறைந்த விஞ்ஞானி ஜி.டி.நாயுடுவின் வாழ்க்கை வரலாறு படத்தில் மாதவன் நடிக்கிறார். இப்படத்தை 'ராக்கெட்ரி: தி நம்பி எபெக்ட்' படத்தை தயாரித்திருந்த அதே தயாரிப்பு நிறுவனங்கள் இணைந்து தயாரிக்கின்றன. ஜி.டி. நாயுடுவின் பிறந்த இடமான கோயம்புத்தூரில் இப்படத்திற்கான படப்பிடிப்பு தொடங்கியது.

இப்படத்தின் டைட்டில் போஸ்டர் சமீபத்தில் வெளியானது. அதன்படி, இப்படத்திற்கு 'ஜி.டி.என்' என்ற தலைப்பு வைக்கப்பட்டுள்ளது. மேலும் இப்படத்தில் யோகி பாபு, ஜெயராம், பிரியாமணி ஆகிய முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்க உள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் 'ஜி.டி.என்' படத்தின் பர்ஸ்ட் லுக் டீசரை படக்குழு வெளியிட்டுள்ளது.

## முதல் டி20 போட்டி: வங்காளதேசம் வெஸ்ட் இண்டீஸ் அணிகள் இன்று மோதல்



வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் அணி வங்காளதேசத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 3 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் ஆடி வருகிறது. இதில் முதலில் நடந்த ஒருநாள் தொடரை 21 என்ற கணக்கில் வங்காளதேசம் கைப்பற்றியது.

இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டி20 போட்டி நாளை தொடங்குகிறது. இந்திய நேரப்படி நாளை மாலை 5.30 மணிக்கு போட்டி தொடங்குகிறது.

இந்த போட்டியில் வென்று தொடரை வெற்றியுடன் தொடங்க இரு அணிகளும் முனைப்பு காட்டும்.

## கிரிக்கெட் வாழ்க்கையை வெற்றியோடு முடிக்க விரும்பினேன்: நியூசிலாந்து கேப்டன்



13வது மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் திருவிழா இந்தியா மற்றும் இலங்கையில் நடந்து வருகிறது. இன்று விசாகப்பட்டினத்தில் காலை 11 மணிக்கு தொடங்கிய 27வது லீக் ஆட்டத்தில் இங்கிலாந்துநியூசிலாந்து அணிகள் விளையாடின. இதில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த நியூசிலாந்து அணி ஆரம்பம் முதலே இங்கிலாந்து பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. 38.2 ஓவர்கள் தாக்குப்பிடித்த நியூசிலாந்து 168 ரன்களில் ஆல் அவுட் ஆனது. இங்கிலாந்து தரப்பில் லின்சே ஸ்மித் 3 விக்கெட்டுகளும், நாட் ஸ்கைவர் பிரண்ட் மற்றும் அலைஸ் கேப்சி தலா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர். இதனையடுத்து 169 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி இங்கிலாந்துவிளையாடியது. தொடக்கம் முதல் இங்கிலாந்து அணி வீராங்கனைகள் அதிரடி காட்டினர். இறுதியில் 29.2 ஓவர்களில் 2 விக்கெட் இழப்பிற்கு இங்கிலாந்து அணி 172 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது.

இந்த தொடரோடு சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக நியூசிலாந்து அணி கேப்டன் ஷோபி டிவைன் அறிவித்திருந்தார். அரையிறுதிக்கு முன்னேறாததால் நியூசிலாந்து அணி தொடரிலிருந்துக்கு வெளியேறியது . இதனால் ஷோபி டிவைனின் கடைசி போட்டி தோல்வியில் முடிந்தது.

இது தொடர்பாக ஷோபி டிவனின் கூறியதாவது ,

ஏமாற்றம் அளிக்கிறது. எனது கிரிக்கெட் வாழ்க்கையை உயர்ந்த இன்னிங்ஸ் மற்றும் வெற்றியுடன் முடிக்க விரும்பினேன். இங்கிலாந்து அணிக்கு பாராட்டு தெரிவிக்க வேண்டும். அவர்கள் பேட்டிங்கில் சிறப்பாக செயல்பட்டனர். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

159 ஒருநாள் போட்டிகளில் 9 சதம், 18 அரைசதங்களுடன் 4279 ரன்கள் அடித்துள்ளார். 146 டி20 போட்டிகளில் 1 சதம், 21 அரைசதங்களுடன் 3,431 ரன்கள் அடித்துள்ளார். ஒருநாள் போட்டிகளில் 111 விக்கெட்டுகளும், டி20யில் 119 விக்கெட்டுகளும் வீழ்த்தியுள்ளார்.

## பிரதோஷ் ரஞ்சன் பால் இரட்டை சதம்.. முதல் இன்னிங்சில் தமிழகம் 512 ரன்களில் டிக்ளேர்

91வது ரஞ்சி கோப்பை கிரிக்கெட் போட்டி இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் 'எலைட்' பிரிவில் இடம் பிடித்துள்ள 32 அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டு லீக்கில் மோதுகின்றன. இதன் 2வது லீக் ஆட்டம் நேற்று தொடங்கியது.

இதில் பெங்களூவில் நடைபெறும் ஆட்டம் ஒன்றில் (ஏ பிரிவு) தமிழ்நாடு நாகாலாந்து அணிகள் விளையாடி வருகின்றன. இந்த போட்டியில் டாஸ் ஜெயித்து முதலில் ஆடிய தமிழக அணியின் தொடக்க ஆட்டக்காரர் ஆதிஷ் 14 ரன்னில் அவுட் ஆனார்.

இதையடுத்து பிரதோஷ் ரஞ்சன் பால், விமல் குமாருடன் இணைந்தார். இருவரும் நிதானமாக ஆடியதுடன் ஏதுவான பந்துகளை எல்லைக்கோட்டுக்கு ஓடவிட்டனர். ஸ்கோர் 337 ரன்னாக உயர்ந்த போது, முதல் தர கிரிக்கெட்டில் முதலாவது சதத்தை அடித்த விமல் குமார் 189 ரன்னில் அவுட்டானார். 2வது விக்கெட்டுக்கு இந்த இணை 307 ரன்கள் சேர்த்தது. அடுத்து ஆந்த்ரே சித்தார்த் வந்தார்.

நேற்றைய ஆட்ட நேரம் முடிவில் தமிழக அணி முதல் இன்னிங்சில் 2 விக்கெட்டுக்கு 399 ரன்கள் அடித்திருந்தது. பிரதோஷ் ரஞ்சன் பால் 156 ரன்களுடனும், ஆந்த்ரே சித்தார்த் 30 ரன்னுடனும் களத்தில் இருந்தனர். இத்தகைய சூழலில் 2வது நாள் ஆட்டம் இன்று நடைபெற்றது.

தொடர்ந்து பேட்டிங் செய்த தமிழக அணி முதல் இன்னிங்சில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 512 ரன்கள் குவித்த நிலையில் டிக்ளேர் செய்தது. இரட்டை சதம் அடித்த பிரதோஷ் ரஞ்சன் பால் 201 ரன்களுடனும், இந்திரஜித் 32 ரன்களுடனும் களத்தில் இருந்தனர். ஆந்த்ரே சித்தார்த் 65 ரன்களில் ஆட்டமிழந்தார்.

பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய நாகாலாந்து அணி தொடக்கத்தில் தமிழக வீரர் குர்ஜப்னீத் சிங்கின் பந்துவீச்சில் விக்கெட்டுகளை தாரை வார்த்தனர். இருப்பினும் தேகா நிஸ்சல் யுகந்தர் சிங் கூட்டணி அணியை சரிவிலிருந்து மீட்டது.

2வது நாள் முடிவில் நாகாலாந்து அணி 4 விக்கெட்டுகளை இழந்து 150 ரன்கள் அடித்துள்ளது. தேகா நிஸ்சல் 80 ரன்களுடனும், யுகந்தர் சிங் 58 ரன்களுடனும் களத்தில் உள்ளனர். தமிழக அணி தராப்பில் குர்ஜப்னீத் சிங் 4 விக்கெட்டுகள் வீழ்த்தி உள்ளார். நாளை 3வது நாள் ஆட்டம் நடைபெற உள்ளது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, Kil-paukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.